சாதியைச் சேர்ந்தவன் என்று சான்றிதழ் கேட்கிறார்கள். தன்னுடைய தாய், தந்தையைத் தெரியாதவன் எப்படி தன்னுடைய சாதியைச் சொல்லுவான்? அவனுக்கே அவனுடைய சாதியைப் பற்றித் தெரியாதபோது வட்டாட்சித் தலைவரிட மிருந்து சாதிச் சான்றிதழ் கொண்டுவர வேண்டுமென்றால் எந்தச் சாதி என்று வட்டாட்சியர் எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே இவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு இல்லாத காரணத்தால் கடந்த மாதம் தொள்ளா யிரம் ரூபாய் மாத ஊதியம் கிடைக்கும் வேலை ஒருவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது. நானே நேரிடையாகக் கண்ட அனுபவம் இது. இதற்காக ஒரு சாதியை, அவர்கள் எந்தச் சாதி என்று சொல்லுங்கள்—எதையாவது ஒன்றைப் போட்டுக் கொடுத்து அதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளை மனமுவந்து வரவேற்று அமர்கிறேன். நன்றி.

5. அறிவிப்பு.

பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப் பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க் கண்டவாறு நடைபெறும்.

22—4—1987 (புதன்கிழமை) முதல் 25—4—1987 (சனிக்கிழமை) வரை	—	ஏற்கெனவே அறிவித்தபடி நடைபெறும்.
26—4—1987 (ஞாயிற்றுக்கிழமை)	—	விடுமுறை.
27—4—1987 (திங்கட்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 48 —ஊரகத் தொழில்கள். மானிய கோரிக்கை எண் 57 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு.
28—4—1987 (செவ்வாய்க்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 28 —சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

1987 ஏப்ரல் 21]

[பேரவைத் துணைத் தலைவர்]

29–4–1987 (புதன்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 36 —பாசனம்.
		மானிய கோரிக்கை எண் 37 — பொதுப் பணிகள்— கட்டிடங்கள்.
		மானிய கோரிக்கை எண் 38 —பொதுப் பணிகள்— பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும்.
		மானிய கோரிக்கை எண் 52 —பாசனம் குறித்த மூலதனச் செலவு.
		மானிய கோரிக்கை எண் 53 —பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.
30–4–1987 வியாழக்கிழமை	—	மானிய கோரிக்கை எண் 12 — தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம்.
		மானிய கோரிக்கை எண் 25 —சின்கோனா.
		மானிய கோரிக்கை எண் 45 —காட்டு வளத் துறை.
		மானிய கோரிக்கை எண் 47 —செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.
		மானிய கோரிக்கை எண் 56 —காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு.
1–5–1987 (வெள்ளிக்கிழமை)	—	மே தினம்—விடுமுறை.
2–5–1987 (சனிக்கிழமை)	—	விடுமுறை.
3–5–1987 (ஞாயிற்றுக்கிழமை)	—	விடுமுறை.
4–5–1987 (திங்கட்கிழமை) மற்றும் 5–5–1987 (செவ்வாய்க்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 15 —காவல் துறை.
		மானிய கோரிக்கை எண் 16 —தீயணைப்புப் பணிகள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் துணைத் தலைவர்]

6–5–1987 (புதன்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.
		மானிய கோரிக்கை எண் 33— வீட்டு வசதி.
		மானிய கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி.
7–5–1987 (வியாழக்கிழமை)	—	மானிய கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்,
		மானிய கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.
		மானிய கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.
		மானிய கோரிக்கை எண் 43—பல்வகை.
		மானிய கோரிக்கை எண் 58—பல்வகை மூலதனச் செலவு.
		மானிய கோரிக்கை எண் 59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.
		1. 1987-88ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்தவரை விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்பு.
		2. வாக்கெடுப்பிற்குப் பின் 1987-88ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு — அறிமுகம் செய்தல்.
8–5–1987 (வெள்ளிக்கிழமை)	—	(1) 1987-88ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.
		(2) அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

9–5–1987 (சனிக்கிழமை) — அரசினர் சட்டமுன்வடிவுகள் —ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 30—சமூக நலன்—தொடர்ச்சி.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கதர்த் தொழில் மற்றும் சமூகநலன் மானிய கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் அதிக பனை மரங்கள் இருக்கக் கூடிய இடங்களைக் கண்டறிந்து அந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக, ஊராட்சியில் ஒரு பனை வாரியத்தைத் தனியாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று முதன் முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

கதர்த் துறையின் பணி இவ்வறட்சிக் காலத்தில் மிகவும் தேவை. நாடெங்கும் வறட்சி மிகுந்து வேலையில்லாத் திண்டாட்டம் கிராமங்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கதர்த் துறையின் மூலமும் சமூக நலத்துறையின் மூலமும் ஏழை கிராம மக்களின் வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். குறிப்பாக எனது தொகுதியில் பனைமரங்கள் அதிகம். பனை மரங்களை மட்டுமே நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-50)

பனங்கற்கண்டு, கருப்புக் கட்டி தமிழகத்திற்கு மட்டுமே உரித் தானது. பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதனீரிலிருந்து ஏழை மக்களால் குடிசைத் தொழிலாக பெரும்பாலும் கன்னியா குமரி, திருநெல்வேலி, சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய வறட்சியான கிராமங்களில் தயார் செய்யப்படுகிறது. இன்று தமிழகத்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதாலும் இங்கு மட்டுமே உபயோகத்தில் உள்ளதாலும் அவைகளைப்